**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 82/2023</u>**

பெயர் : அமுதசுரபி P.W.1. (Cross Continuation)

க/பெ. : இன்பநாதன்

தேதி : 06.10.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u> –**

1. எனது தகப்பனார் பெயர் பழனியாண்டி, தாயார் பெயர் கோவிந்தம்மாள் ஆகும். எனது உடன்பிறந்தவர்கள் அசோக்குமார், பாலசுப்ரமணியன், சுபஸ்ரீ ஆவார்கள். எனது தகப்பனாரின் பெற்றோர் பெயர் திருமுடி, குப்பம்மாள் ஆகும். உயிலில் குறிப்பிடப்பட்டுள்ள புல எண்ணானது ஆனந்தவள்ளி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2. மேற்படி ஆவணம் என்னிடம் என்பதால் தான் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உயிலில் குறிப்பிடப்பட்டுள்ள புல எண்ணானது ஆனந்தவள்ளி என்பவருக்கு பாத்தியப்பட்டது இல்லை என்றாலும், தவறான புல எண்னை குறிப்பிட்டு நான் மோசடியாக உயிலை தயார் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. அதனால் நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்க தக்கது அல்ல என்றாலும், இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றாலும் சரியல்ல. உயிலில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தானது அரசாங்கத்திற்கு சொந்தமானது என்றால் சரியல்ல.